

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுறஸூலுல்லாஃ"

புத். 1. { அறப் ௵ 1311 துல்ஹஜ்ஜு ௴ 1௳ செ. க. } இல. 8.
{ இங்கிலீஷ் ௵ 1894 ஜூன் ௴ 5௳ செ. கி. }

## ஹஜ்ஜு.

நாம் இம்முறையில் இச்சங்கியை வாயிலாக ஹஜ்ஜுடைய விஷயத்தையே விசேஷமா யெழுதக் கருதினோம். இந்த மாதமாகிறது ஹஜ்ஜு வந்தனத்துடைய மாதம். இந்த மாத்தையின் ஒன்பதாம் நாளில் ஹஜ்ஜு நடத்தப்படும். அதை "அறபா" என்று அழைக்கப்படும். பத்தாம் நாளை "ஈட்" என்று அழைக்கப்படும். அதாவது பெருநாள் என்பதுவே. பெருநாளைப்பற்றி பின்னே பேசுவோம்.

சுத்த சத்திய பரிசுத்த இஸ்லாம் மார்க்கம் ஐந்து நிபந்தனைகளில் இயற்றப்பட்டிருக்கின்றன. அவ்வைந்து நிபந்தனைகளும் சர்வ வல்லமையுடைய அல்லாஹுதஆலாவால் குர் ஆன் என்னும் பரிசுத்த வேதாகம மூலிய மாய்க் கற்பிக்கப் பட்டவைகளாம். இவைகளே இஸ்லாமுக் காதாரம். இவ்வைந்து நிபந்தனைகளில் கடைசியானதும், பணங்காசு, சரீர பலம், மனத்திடம், வாக னாதாரம், வழித்துணை முதலியவைக ளுண்டாயிருக்கிறவர்களுக்கே முக்கிய கடமையானதும், மக்கா என்னும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆயுளில் ஓர் முறை செய்யக்

கடமையானதுமாகிறது ஹஜ்ஜு என்னும் வந்தனம். இவ்வந்தனம் மக்காப்பட்டணத்திலே செய்யவேண்டியதாதலால் அப்பரிசுத்தப் பட்டணத்தைப்பற்றி சிலவற்றைப் பேசுவோம்.

நபி இபுறாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் காலத்தின் முன்னர் அறபு ராச்சிய முழுதும் மனித சஞ்சாரமற்ற வனாந்தரமாயிருந்தது. ஆனால் அறபு ராச்சியத்தின் தென்பாகத்துள்ள "எமன்" என்னும் நகரில்மாத்திரம் அக்காலத்தில் ஜனங்கள் குடியிருந்தார்கள். அப்போது நபி இபுறாகீம் அவர்கள் சாம் ராச்சியத்தில் உர்தன் என்னும் பட்டணத்தில் தங்கள் பிராண நாயகியாராகிய சாறாவுடனும் சாறுக் கென்னு மிராயன் இனும் கொடுத்த ஹாஜறா வுடனும், மற்றப் பரிவாரங்களுடனும் குடியிருந்து வந்தார்கள். இப்படி வாழ்ந்திருக்குங் காலத்தில், ஒரு நாள் அமரர்களின் சிரேட்டராகிய ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இபுறாகீம் நபி அவர்களிடம் வந்து, அல்லாஹ் உடைய பரிசுத்த தூதரே! தங்கள் பிராண நாயகியாராகிய சாறாவின் பொருட்டால், தங்களுக்கு உலகமதிக்கத்தக்க ஒரு புத்திரரைக் கொடுக்கத்தான் நாடியிருக்கிறதாக அல்லாஹு தஆலா அறிவிக்கச்சொன்னான் என்று அதிக ஆனந்த முண்டாகும்படி சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

அமரர் பெருமான் வந்து சொன்ன இந்த நன்மாராயத்தை நபி அவர்கள் கேட்டு ஆநந்த சமுத்திரத்தில் மூழ்கினார்கள், தங்கள் சித்தத்தில் புத்திர பாக்கிய முண்டாகுமென்னும் ஆநந்த முண்டான வுடனே "எனக்குப் புத்திரன் பிறந்தால் அல்லாஹ்வுக்கு அந்த புத்திரனை பலிகொடுத்து விடுவேன்" என்று பிரார்த்தனை பண்ணிக் கொண்டார்கள்.

இங்கே நடந்த விஷயங்கள் யாவற்றையும் தங்கள் பிராண நாயகியாராகிய சாறாவிடம் நபி அவர்கள் சொல்லிக் காட்டினார்கள். இதை சாறா கேட்டு தமது சரீர நிலைபரத்தைப்பற்றி சிந்தித்து, புருஷ நாயகராகிய இபுறாகீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி எனது பிராணநாயகரே தமியளாகிய நான் வயது முதிர்ந்து விருத்தாப்பிய திசையை அடைந்துபோனேன். அன்றியும் மாத ருதுகமும் தடைபட்டு நின்று போயிற்று. இப்படிப்பட்ட எனக்கு பாலகன் பிறப்பான் என்பது ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால், இச்சொல்லோ அல்லாஹ் உடைய திருவாக்காதலால் அது எந்தக்காலத்திலும் தவறாது. இது என்ன புதுமையோ தெரியவில்லை. ஆனாலும், என் பொருட்டால் என்று சொல்லப்பட்டதன்றி என் வயற்றில் என்று சொல்லப்படாமையால், அதற்குத் தாற்பரியம் வேறுண்டு. அதை நான் சொல்லுகிறேன்; சாறாவின் வயற்றில் என்று சொல்லாமல் பொருட்டால் என்ற படியால், மிஸ்று அரசன் சாறாக்கு இனாமாகக் கொடுத்த ஹாஜறாவை தங்களுக்கு நானே பாரியாக்கித் தருகிறேன். தாங்கள் அப்பெண்ணுடன் கூடிச் சுகம் அனுபவிக்கும் பட்சத்தில், நாயன் சொன்ன பிரகாரம்

புத்திர பாக்கியம் உண்டாகும். அப்படி ஹாஜறா பாலகனைப் பெற்றால், அப்பாலகனை என் கண் மணியாகப் பாவிப்பேன் என்று கூறிவிட்டு, உடனே பெண்கள் சிகாமணியாய் அழகிற் சிறந்த ஹாஜறாவை மங்களமாட்டி அலங்கரித்து மணவாளியாக்கி மார்க்கப் பிரகாரம் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு விவாகஞ் செய்வித்துக் கொடுத்தார். ஹாஜறாவும் நபி அவர்களுங்கூடிச் சுகித்து வாழ்ந்தார்கள். அப்படி வாழுங் காலத்தில் ஹாஜறா கருப்பவதியாகி மாதங்கள் நிறம்பி பிரசவகாலம் அடுத்து கருமாரி ஆரம்பமாகவே, சாறாவும் மற்றப்பெண்களும் சூழ்ந்திருக்க, ஒப்பற்ற முகரூபமும் தேக காந்தியும் அவயவ லட்சணமும் உடையவர்களாய், உலக மாதாவாகிய ஹாஜறா வயிற்றினின்று, நபிகள் பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பாட்டனாராகிய நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதிக சிறப்பாகவும் மேன்மையாகவும் பிறந்தார்கள். நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருந்த பேரொளி நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

பின்னே நபி அவர்கள் பாலகன் பிறந்தவுடன் ஆனந்தசாகரத்தில் மூழ்கினவர்களாய், தங்களுக்குரிய மார்க்கப் பிரகாரம் செய்யவேண்டிய பிள்ளைச் சடங்குகள் அனைத்தும் செய்து இஸ்மாயீல் என்று நாம கரணஞ் செய்து உயிரைப்பேணி காப்பது போல பிள்ளையைப் பேணிக் காத்து வளர்த்து வந்தார்கள்.

இப்படி இப்பிள்ளை வளர்ந்துவருங் காலத்தில் தேவதூதர்கள் முன்னறிக்கைசெய்ய, தொண்ணூறு வயது சென்ற கிழவியும் மலடியுமாகிய சாறா அவர்களும் கருப்பவதியாகி ஓர் பிள்ளையைப் பெற்றார்கள். அந்தக்குமாரருக்கு இஸ்ஹாக்கு என்று நாமகரணஞ் செய்யப்பட்டது.

நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹுதஆலா தங்களுக்கு, இஸ்மாயீல் இஸ்ஹாக்கு என்னும் இரு குமாரர்களைக் கொடுத்ததற்காக அவனைப் புகழ்ந்தார்கள். சாறாவும் களிப்புற்று அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். பிற்பாடு சேஷ்டரும் கனிஷ்டருமான இரு புத்திரர்களையும் இரு கண் மணியைப்போல பேணிக் காத்து வளர்த்து வந்தார்கள்.

ஒரு நாள் இரு குமாரர்களும் வில்லுகளையும் அஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு சமர்த்துப்பார்க்கவேண்டி ஒரு தானத்திற்குப்போய் இலக்கு வைத்து எய்தார்கள். இருவரும் குறி பார்த்து எய்ததில் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் எய்த அஸ்திரம் இலக்கைக் கடந்து மிகைத்தது. இதைப் பார்த்திருந்த இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூத்த குமாரனின் அஸ்திரம் முந்தக்கண்டு மனம் பூரித்து அங்கிருந்து வந்து மூத்த குமார

ரை முகந்து முத்தமிட்டு மடியில்வைத்துக்கொண்டு இளைய குமாரரைப் பக்கத்தில் இருத்தி உட்கார்ந்திருந்தார்கள்.

தமது புருஷர் நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாஜறாவின் புதல்வரை மடியிலும், தாம் ஈன்ற புதல்வரைப் பக்கத்திலும் வைத்துக் கொண்டிருப்பதை சாறா கண்டு, தாங்கரிய பொறாமையுற்றார். தமக்குண்டான பொறாமை அதிகரிக்கவே மனம் புழுங்கி, கண்கள்சிவந்து முகத்தில் ரத்தஞ் சிந்த அதிக கோபமாய் நாயகரை அடுத்து நின்று; ஹாஜறாவை மிஸ்று அரசன் எனக்குக் கொடுத்தான். நான் அவளை அடிமைப் பெண்ணாகப் பாவித்து வந்தேன். அப்படிப்பட்டவள் பெற்ற மகன் மடிமேல் இருக்க, என் கண் மணியான நான் பெற்ற மகன் தரையில் இருக்கச் செய்தது நியாயமா? இதை நான் கண்டு சகித்திருப்பேனோ? நல்லது; இருக்கட்டும். அந்த ஹாஜறாவின் உடலில் ரத்தஞ்சிந்தக் காயப்படுத்தி வதைக்கிறேன். அல்லாஹ் பேரில் பிரமாணிக்கமாக நான் அப்படியே செய்கிறேன் என்று அதிக மனக்கடுப்புடன் சொன்னார், பின்பு தாம் சொன்ன பிரகாரம் நடத்த இடம் வாய்க்கவில்லை. ஹாஜறா பேரில் ஒரு குற்றத்திற்குமிடம் இருக்க வில்லை. ஹாஜறாவில் ஒரு பிழையுங் கண்டுக்கொள்ளக்கூடாமையால் சாறா மனந் தளர்ந்து கவனப் பட்டுக்கொண் டிருப்பதைக் கண்ட நபி இபுறாஹீம் அவர்கள் சாறாவைப் பார்த்து சாறாவே நீர் ஹாஜறாவின் உடலில் ரத்தந் துளிக்கக் காயப்படுத்துவேன் என்று அல்லாஹ் பேரில் சத்தியம் இட்டிருப்பதால், அது பழுதாகக்கூடாது. இதற்கு நான் ஒரு தந்திரஞ் சொல்லுகிறேன். ஹாஜறாவின் இரு செவிகளிலும் ரத்தஞ் சிந்தத் துவாரம் இடும் என்று சொன்னார்கள். இதைக் கேட்டு சாறா ஹாஜறாவின் இரு செவிச் சோணைகளிலும் இரண்டு துவாரம் இட்டார். அன்று தொட்டு முஸ்லிமத்தான பெண்களுக்கு காது குத்துவது நமது மார்க்கத்தில் ஆகுமான கருமமாயிற்று. இதன் பிறகு சாறாவின் சினந் தணிந்தது தணிந்தாலு மென்ன? பொறாமை நீங்கவில்லை. பின்னும் சாறா வந்து தனக்கும் ஹாஜறாவுக்கும் ஒருவிஷயத்திலும் ஒற்றுவருகிறதில்லையென்றும் பிள்ளைகள் ஒருவிடத்திலிருந்தால் சரிப்படாதென்றும், அந்தப் பிள்ளையையுந் தாயையும் தங்களுக்கு விருப்பமுற்ற வேறோர் தலத்தில் விலக்கி வைத்து விடுங்கள் என்று கண்டிப்பாய்ச் சொன்னார். தங்கள் நாயகியின் சொல்லைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் சுவர்க்கத்து குதிரை யொன்றை யெடுத்துக் கொண்டுவந்து இஸ்மாயிலையும் ஹாஜறாவையும் சாறா சொன்னதுபோல அதிலேற்றிக் கொண்டு புறப்படும்படி ஏவ, அப்படியே யேறவே, ஜிபுறீல் அதன் கடிவாளத்தை பிடித்து நடத்தவே, ஒரு இட்சணப் பொழுதில் அறபு ராச்சியத்து நடு வனாந்திரத்தில் வந்து சேர்ந்தது

அந்த விடத்தில் செந்நிறமுள்ள மணற்றிடருக்கு நேராய் அந்த குதிரை தரையிற் படிந்து நின்றது. நபியே இந்தவிடத்திற்கு பெயர் "மக்கா" இதுசிறப்புடையதலம். தங்கள் மகனார் இஸ்மாயீலை இங்கே விடுங்கள் அவர் மனிதர்களில் அதிசிரேட்டர். கஉபாவென்னும் தேவாலயமொன்றிங்கிருந்தது. அது நூஹு நபியின் பிரளய காலத்தில் வானத்தில் உயர்த்தப்பட்டது, அதன் அடித்தளம் மணல்மூடி மேடிட்டிருக்கிறது. அதுதான் இந்த செம்மணற் றிடர் என்று ஜிபுறீல் சொன்னார்கள். இதைக்கேட்ட மாத்திரத்தில் நபி அவர்கள் தங்கள் குமாரரையும் மனைவியையும், குதிரையாலிறக்கி, ஹாஜறுவை நோக்கி, ஹாஜறு! இது அல்லாஃவின் திருச் சித்தத்தின்படி நடக்கிற காரியம். நீர் மைந்தரோடு இங்கே இரும். நான் சாமுக்குப் போய் வருகிறேன். நீர் ஒன்றிற்கும் அஞ்சவேண்டாம் என்று கூறி தாங்கள் கொணர்ந்திருந்த ரொட்டியையும் தண்ணீர் கரத்தையும் கையிற் கொடுத்தார்கள். அப்போது உலக தாயாராகிய ஹாஜறு கலையைப் பிரியும் பெண் மான்போல மறுகி நின்று தங்கள் நாயகரை நோக்கி, அல்லாஃ உடைய தூதரே! இது ஒரு சிறிய வாடியுமல்ல, வனாந்தரம். உள்ளது ஒரு மணல் மேடு. பக்கத்தில் நாலிரண்டு ஈத்த மரங்களன்றி வேறு நிழலுமில்லை. இந்த நிர்மானுஷியமான தலத்தில் எப்படியிருப்போமென்று துயரமாய்க் கூறியபோது, ஹாஜறு! சர்வ சீவ கோடிகளும் செய்யும் முறைப்பாடுகள் அனைத்தையும், காதின்றிக் கேட்டு, அததன் கருமங்கள் எல்லாவற்றையும் கண்ணின்றிப் பார்க்கிற பரம கர்த்தனாகிய அல்லாஃ ஒருவன் எவருக்கும் துணை செய்கிறவனாயிருக்கிறான், அவன் ஆதரவில் நீரும் இரும் என்று தைரியசித்தமுண்டாகச் சொல்லிவிட்டு குதிரையி லேறிப்போய் விட்டார்கள். சில தூரம்வந்து தன் சமூசாரத்தைக் காப்பாற்றும்படி பிரார்த்தித்து அல்லாஃவின் அடைக்கலமாக மனைவியையும் மகனாரையும் ஒப்படைத்தார்கள். இரவான போது பிள்ளையும் தாயும் ரொட்டியைத் தின்று சலத்தைக் குடித்துவிட்டு நித்திரை செய்தார்கள். காலமே எழுந்து மைந்தனை மடியில் வைத்து ஈத்த மரத்தில் துப்பட்டியைக் கட்டி நிழல் மரைவில் நின்றார்கள். மத்தியான வேளை தண்ணீர் தாகத்திற்காக ஹாஜறு ஜலந் தேடிப் பட்ட அவஸ்தையோ மெத்த! மெத்த!! அவைகளை யிங்கே சுருக்கினோம். சபாவுக்கும் மறுவாவுக்கு மிடையில் ஓடி ஓடி நாயனைப் பிரார்த்தித்தார்.

இப்படி நீர்த்தாகம் அதிகரித்து சபாவுக்கும் மறுபாவுக்கும் இடையில் ஓடி ஓடி ஹாஜறு தவித்திருக்கும்போது நாயனுத்தரவுப்படி ஜிபுறீல் தோற்றரவாகி ஆசீர்வாம் கூறிச் சென்றார்கள். இதைக் கேட்டு சந்தோஷமுடன் மைந்தரிருக்குமிடத்திற்கு திரும்பிவரும்போது நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தாங்க

ளிருக்கு மிடத்தில் ஈத்த மரத்தின் கீழ் தங்கள் கை விரல்களால் நிலத்தைக் கிளறிக் கொண்டிருந்தார்கள். அதை ஹாஜரு பக்கததில்வந்து பார்த்தபோது குழியிலிருந்து தெண்ணீர் ஊறிப் பிரவாகித்தது. அல்லாஃவின் தத்துவங்கொண் டுண்டான நீரூற்றின் மதுரமான ஜலத்தைப் பருகித் தாகந் தீர்ந்து, அளவற்ற ஆநந்தத்துடன் தாயும் பிள்ளையும் அங்கே உட்கார்ந் திருந்தார்கள். இது தான் மக்கா நகரத்திலுள்ள ஜம்ஜம் என்னும் பிரதான நீரூற்று. நீர் ஊறிப் பிரவாகிக்கக் கண்ட ஹாஜரு அந்நீரை நோக்கி ஜம்ஜம் என்று சொன்னார்கள், அதனால் தான் ஜம்ஜம் என்று பெயர் வழங்குகிறது. ஜம்ஜம் என்றால் நில்லு நில்லு என்பது அர்த்தமாம்.

அற்புதமாயுண்டான நீரூற்றில் ஜலம் பருகி மகிழ்ந் திருக்கும்போது எமன் ராச்சிய வர்த்தகரிற் சிலர் சாம் ராச்சியம் போக வந்தவர்கள் கண்டு ஆச்சரியப்பட்டு உலக மாதாவாகிய ஹாஜரு விடத்தால் சகல வர்த்தமானங்களையும் அறிந்து கொண்டு அவர்கள் வியாபாரத்துக்காக சாமுக்குப் போய் மீண்டு எமனுக்கு வந்து அறபு ராச்சிய வனாந்திரத்திற் கண்ட காட்சிகளைப் பிரஸ்தாபப்படுத்தி அனேகர் எமனிலிருந்து குடி எழும்பி வந்து மக்காவில் குடி ஏறினார்கள். மக்கா பட்டணம் அப்போதுதான் உண்டானது.

நபி இபுறாகீம் அலைஹிஸ்ஸலாம் தங்கள் மனைவியையும் மைந்தரையும் வனாந்திரத்தில் விட்டு விட்டுப்போன பிற்பாடு தாங்கள் நினைத்த நேரமெல்லாம் அந்த சுவர்க்கத்து குதிரையிலேறி வந்து பார்த்துக் கொண்டு போவார்கள்.

இவ்வாறு நிகழுங் காலத்தில் துல்ஹஜ்ஜு மாதம் பிறந்தது. இந்த மாதம் 8ந் தேதி இரவு நித்திரையில் இபுறாகீமே நீர் நிறைவேற்றுகிறதாக வாக்குப் பண்ணின பிரார்த்தனையை நிறைவேற்று மென்று கனவில் ஒருவர் வந்து சொல்லும்படி கண்டார். காலமே எழுந்து மக்காவுக்கு வந்து நூறு செம்மறி யாடுகள் அறுத்துப் பலி கொடுத்தார்கள். பின்னை மறு நாளிரவும் அதே பிரகாரங் கண்டார். அன்று நூறு ஒட்டகங்களை யறுத்துக் கொடுத்தார். பின் மறு நாளிரவும் அதே பிரகாரம் "உமது பொருத்தனையை சரிவர நிறைவேற்றும்" என்று சொப்பனங் கண்டார். சொப்பனத்திலே "என் பொருத்தனை எதைக் கொண்டு சரிவர நிறைவேற்றும்?" என்று கேட்கவே, உமது மகன் இஸ்மாயீலைப் பலி செலுத்துவதாக வல்லவா உமது பொருத்தனை பண்ணப்பட்டது! என்று மறுமொழி சொல்லப்படவே, பதறியெழுந்து தாங்கள் முன் பிரார்த்தனை செய்ததை ஞாபகப்படுத்திக்கொண்டு, பொழுது எப்போ விடியுமென்று காத்திருந்து பொழுது உதயமான வுடன் சிற்றுண்டி புசித்து வழக்கப்படி

குதிரை யேறி மக்காவுக்குச் சென்றார்கள். அன்று துல்ஹஜ்ஜு மாதம் 10ந் தேதி மக்காவுக்குவந்து தங்கள் மனைவி ஹாஜருவை விளித்து, ஹாஜரூவே! இப்போதே இஸ்மாயீலுக்கு மஞ்சனமாட்டி புத்தடை யுடுத்து என்று கட்டளை பண்ணவே, யாதொரு கேள்வியுமின்றி நாயகர் கட்டளைப்படி செய்தார். அப்போது நபி அவர்கள் மகனைப்பார்த்து இஸ்மாயீலே! நாம் இருவரும் அதோ பக்கத்திலிருக்கிற அடவியிற்போய் விறகுவெட்டிக்கொண்டு வருவோம். நீ ஒரு கூர்க் கத்தியும் கயிறும் எடுத்துக் கொண்டு வா என்று சொன்னார்கள் தந்தை சொற்படி கத்தியுங் கயறுமெடுத்து வந்தார்கள். அப்போது மனையிலிருந்து இருவரும் புறப்பட்டார்கள். இஸ்மாயீல் நபி அவர்களுக்கு அப்போது வயது பன்னிரண்டு. தந்தையும் பிள்ளையும் மனையால் வெளிக்கிட்ட பிறகு வஞ்சகம் நிறைந்த பாதகனாகிய பசாசு மானிட ரூப மெடுத்து பெரியவர்போல வேஷந்தரித்து ஹாஜருவின் மனைக்கு வந்து, அம்மா! ஹாஜரூ! உன் புருஷன் பிள்ளையைக் கொலை செய்யக் கத்தியுங் கயறு மெடுத்துப்போகிறார் என்று பல விதமான தந்திர உபாயமாகக் கூறிக் கலைக்கக் கூடிய பிரயாசமெல்லாம் எடுத்தான். அவன் சொல்லுக்குக் கொஞ்சமேனும் வழிபட்டாரில்லை. அம்மா! இவர் கனவு கண்டு, கர்த்தனுடைய கட்டளையென்று பிள்ளையைக் கொல்லப் போகிறார் இந்த அவசரத்தில் நீ கேட்டுப்பார்த்து என் சொல்லை நம்பு என்று திரும்பவும் வந்து சொன்னான். நீ சொல்லக்கேள்! நபிமார்கள் வாயில் பிறக்குஞ் சொல் கொஞ்சமும் பழுதாகாது. அவர்கள் சொல்லுவதெல்லாம் உண்மையே. அவர்கள் கனவிற் கண்டதும் கர்த்தனுடைய ஏவலாகவே யிருக்கக் கூடும். என் பிராண நாதர் கர்த்தன் விதிப்படி பிள்ளையை யறுக்கப் போனால் அதைத் தடுக்க நான் எம்மாத்திர மனுஷி. புருஷ நாயகரின் வார்த்தைக்கு மேற்பட்டு நிறுத்த என்ன முகாந்திரம் இருக்கிறது? நாடு கெட்டாலும் நகர் கெட்டாலும், கைப்பொருள் கெட்டாலும், உற்றார் உரியார் கெட்டாலும், உடல் கெட்டாலும், உயிர் கெட்டாலும், மற்ற என்ன கெட்டாலும் சரி; ஒரு மனைவி தன் மனவாளனுக்குக் கீழ்ப்படிந்து அவன் சொல்லும் வழியில் ஒழுகுவதே நியாயமான முறைமை. புருஷ நாயகர் எவ்வழியில் போக ஏவினாரோ அவ்வழியில் போகப் பெண்கள் கடமை யுடையவர்களா யிருக்கிறோம். ஆகையால் நீ என்னைக் கலைக்காமல் போய்விடு என்று துரத்தினார்கள். பசாசும் கலைவுக்கிடமில்லாதலால் அவ்விடத்தால் விலகிப்போய், நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமைக் கலைக்கத் தெண்டித்தான் அதுவும் முடியவில்லை. பின்னை, இபுறாகீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கலைக்க முடிகினான் அதுவுங் கூடவில்லை. நபி அவர்கள் இபுலீசைத் துரத்தி விட்டுப்போட்டு ஜம்றத்துல் அகபா என்னும் இட

த்திற்குப்போக, அங்கேயும் இபுலீசு மறுத்தும் வந்து எதிர்ப்பட்டான். அப்போது ஒரு கல்லெறிந்தார்கள் பின்னே ஒன்றின் ஒன்றாக ஏழு கல்லுகள் எறிந்த பிறகு அவன் மறைந்துபோய் விட்டான். அப்பால் ஜம்றத்துல்வுஸ்தா வென்னுந் தலத்திற்கு போனார்கள். அங்கேயும் பசாசு வந்தான், ஏழு கல்லுகளால் எறிந்து விரட்டினார்கள். அப்பால் ஜம்றத்துல் குப்றா என்னு மிடத்திற்கு வந்தார்கள். அங்கேயும் இபுலீசு வந்தான் ஏழு கல்லுகளை யெறிந்து துரத்தினார்கள். அத்தோடு அற மறைந்து போய்விட்டான். அப்பால் மினா என்னுந் தானத்திற்கு அருகில் இருக்கும் தபீறு என்னும் மலை பக்கத்தில் வந்து மகன் இஸ்மாயீலைக் கிட்டே அழைத்து, தான் முன் செய்துகொண்ட பிரார்த்தனையையும், பின்னே கனவு கண்டதையும், இப்போது நடத்த எண்ணி வந்ததையும் சொல்லிக் காட்டினார்கள். நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதற்கு முழுமனதோடு சம்மதித்து அவ்வேலையை விடாது நடத்தும்படியே தெண்டித்தார்கள். பின்னே இஸ்மாயில் நபி அவர்களின் கைகளைச் சேர்த்துக் கட்டி கீழே இடது புறமாக ஒருக்கணித்து கிடத்தி அங்கம் பதறாமல் முகத்தை திருப்பிக் கொண்டு "அல்லாஹு அக்பர்" என்று அறுத்தார்கள். கத்தி கழுத்தில் அழுந்தாமல் கூர்ப்புறம்மேலும் பிடங்கு கீழுமாகப் புரண்டு திருகிக்கொண்டது. அப்போது, தந்தையே! கத்தியைக் கூர்மையாகத் தேய்த்துக்கொண்டு சீக்கிரத்தில் அனுப்பிரமாணப்பற்றும் என்னாமல் வன்மையாக அறுங்கள்" என்று இஸ்மாயீல் நபி அவர்கள் சொன்னார்கள். உடனே அருகிலிருந்த கல்லில் தீட்டி அறுக்கப்போகையில், தந்தையே! என் மேனி பதறாமல் கட்டை இன்னும் இறுக்கிக்கட்டி அறுங்கள். கட்டிளகினால் கைகால் துளும்பும், அப்போது ரத்தம் துளித்துத் தங்கள் ஆடையில் தெறிக்கும், அதனால் என் நன்மை குறையும், கீர்த்தியும் குன்றும். ஆதலால், ஆடையை ஒதுக்கி நின்று ஒரு நொடிக்குள் அறுத்துவிடுங்கள் என்றார்கள். மகனே! இந்தப் புதுமை இன்னது என்று நான் அறியவில்லை, உன் மனதை அல்லாஹ் புறம் நாட்டிக்கொண்டிரு, என்று சொல்லிவிட்டு இரண்டாம் தரமும் அறுத்தார்கள். அப்போதும் முன்போலவே மேல் கீழாய்ப் புரண்டு கை திருகிக்கொண்டது. மூன்றாந் தரத்தில் ஓங்கிக் கழுத்தில் வெட்டினார்கள். அப்போதும் கழுத்திற்படாமல் பிடங்கு திரும்பி கையுந் திருகுண்டது. அப்போது, தந்தையே என் கழுத்துப் புண் போல நோகுது. இனி தாமதிக்காமல் கத்தி முனையால் ஓங்கிக் குத்திவிடுங்கள், என்றார்கள். இதைக் கேட்டு இபுறாகீம் நபி அவர்கள் மூன்றுதரம் அறுத்துக்கைசலித்த சினத்தினாலும் அல்லாஹ்வின் ஏவலை நிறைவேற்ற வேண்டுமென்கிற பிடிவாதத்தினாலும், கத்திப்பிடியைக் கையிற்பிடித்து மிக வன்மையுடன் ஓங்கி முனையால் கழுத்திற்குத்தினார்கள், அப்போது கத்தி மெழுகுபோல வளைந்து

சுருண்டது. கழுத்தில் நின்று எடுத்தவுடன் முன்போலவே நீண்டு கத்தியாயிற்று. இந்தப் புதுமையால் மனம் புழுங்கி நான்காம் முறையும் தங்கள் கருமம் நிறை வேறாமையைப்பற்றி, கையிலிருந்த கத்தியை அப்புறமுள்ள கல்லிற் தாக்கினார்கள். அது பிடி வரையில் கல்லுக்குள் அமிழ்ந்தியது. இந்தப் புதுமையைக்கண்டு அதிக ஆச்சரியமுற்று, திகைத்து நின்றார்கள். அப்போது அசரீரியானசத்தம் ஒன்று "மனோதிடனுள்ள இபுறாகீமே, பிரார்த்தனையை நிறைவேற்றும் என்று முன் கனவிற் கண்டதுபோல உண்மையாக நிறைவேற்றினீர். இதோ செம்மறி யாடு ஒன்று உமது மைந்தருக்கு வதிலாக வருகிறது; அதைப் பிடித்து அறுத்துப் பலியிடும். அவ்விதம் இன்றைத்தினம் ஆடறுக்கும் உமக்கும், உமது சந்ததியாகிய முஹம்மது நபிக்கும், அவர் உம்மத்துமார்களுக்கும், இந்த மாதத்து இந்தத் தேதி பெருநாள் ஆகும். இந்தப் பெருநாளைக்கொண்டு முஸ்லிம்கள் நன்மையடைவார்கள். இத்தினம் சர்வ தீமைகளையும் விலக்கும் பரிசுத்தத்தினம்," என்று அவர்கள் காதில் விழுந்தது. இந்தச்சத்தங் கேட்டபோது நபி இபுறாகீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திருவாய்திறந்து "அல்லாஹு அக்பர்" (நாயன் மகத்தானவன்) என்று மூன்று தடவை சொன்னார்கள். இதைக் கேட்டு மகனார் நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்" (அல்லாஃவே அன்றி நாயன் இல்லை. அல்லாஃ மகத்தானவன்,) என்று மூன்று தரஞ் சொன்னார்கள். இருவரும் இப்படிச் சொன்னதை எல்லாம் பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த ஜிபுறீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "அல்லாஹு அக்பர், வலில்லாஹில்ஹம்து" (அல்லாஃ மகத்தானவன், புகழடங்கலும் அல்லாஃவுக்குரியன,) என்று ஒருதரஞ் சொன்னார்கள். அன்றுமுதல் இந்தமகத்துவ வாக்கியங்களை பெருநாட்களில் சொல்லுவது முஸ்லிம்களுக்கு நியமகமாயிற்று. இவர்கள் இப்படிப் புகழ்ந்த வார்த்தை முடிந் தட்சணமே, தபீறு மலைச்சிகரத்திலிருந்து செம்மறி யாடொன்று "அல்லாஃவின் திரு நாமத்தினால் அறுபடவேண்டி இதோ நான் வருகிறேன் என்னை அறுங்கள்" என்று சொல்லிக்கொண்டு கீழே இறங்கி வந்தது. இதைக்கண்டு ஆச்சரியமுற்றார்கள். மகனாரை அவிழ்த்து விட பார்த்தபோது கட்டு தானாகவே அவிழ்ந்து கிடந்தது. பிற்பாடு மகனாருடைய மேலங்கிகளை அணியும்படி கொடுக்கவே வாங்கி அணிந்து, அல்லாஃவுக்கு "ஸுஜூது" (சிரம் படிந்து வணக்கம்) செய்து புகழ்ந்தார்கள். பிற்பாடு நபி அவர்கள் மைந்தருடன் மேற்படி செம்மறியாட்டைப் பிடித்துக்கொண்டு இப்போது ஹஜ்ஜில் பலி செலுத்துகிற தானமாகிய

மிஞ என்னும் இடத்தில் வந்து அறுத்துப் பலி கொடுத்தார்கள். அந்த ஆட்டின் தலை தவிர உடல் முழுவதையும் வானத்திலிருந்து அக்கினி யொன்று வந்து பட்சித்தது. பின்னே பலி செலுத்திய ஆட்டின் தலையைக் கையி லெடுத்துக்கொண்டு மைந்தருடன் வீடுவந்துசேர்ந்து நடந்த வர்த்தமானங்கள் சகலதையும் தங்கள் மனைவியாகிய ஹாஜருவுக்கு நபி இபுறுகீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொல்லிக் காட்டினார்கள். இவைகளைக் கேட்டு புதுமையாகி, ஹாஜரு மைந்தரை அணைத்து முத்த மிட்டுக்கொண்டு அல்லாஃவைப் புகழ்ந்து துதித்தார்கள்.

இதோ மேலே சொல்லப்பட்டவைகளே மக்காவுண்டானதற்குக் காரணமும், தற்காலம் ஹஜ்ஜில், தொங்கோட்டம் ஓடுதல், கல்லெறிதல், குர்பான்கொடுத்தல் முதலிய கிரியைகளுக்கும் ஆதிமூலகாரணமுமாம்.

## கஉபத்துல்லாஃ.

மக்காப் பட்டணத்தி லிருக்கின்ற "கஉபா" என்னும் பரிசுத்த தேவாலயம் ஆதம் நபியைப் படைப்பதற்கு அனேக ஆண்டுகளுக்கு முன் தேவதூதர்களாகிய அமரர்களால் சுவர்க்க ரத்தினங்களைக் கொண்டு கட்டப்பட்டது. ஆதம் நபி பூமியி லிறக்கப்பட்ட பிறகு கஉபாவை பிரதக்கணஞ் செய்து அதில் நாயனை வணங்கும்படி கட்டளை பிறந்து வணங்கி வந்தார்கள். ஆதம் நபிக்கு ஆயிரம் வருடத்திற்குபின் அவரது பத்தாம் பௌத்திரராகிய நூஹு நபி பிறந்தார். அவர் காலத்தில் மாறுபட்டிருந்த பகைஞர்களுக்காகப் பிரளயம் உண்டாயிற்று. அப்போது "கஉபா" நான்காம் வானத்திற்கு உயர்த்தப் பட்டது. பின்னே இபுறுகீம் நபியுடையகாலத்தில் அந்தப் பழைய கஉபாவின் மணல் மேடிட்டு மறைத்திருந்த அஸ்திபாரத்தின்மேல் அல்லாஃவின் உத்தரவுப்படி, இபுறுகீம் நபி தங்கள் மகனோடு சகிதராகக் கட்டிமுடித்தார்கள். கஉபாவுக்கு பைத்துல் அத்தீக் பூர்வீகமாகிய வீடென்றும் பெயருண்டு. இதை ஏழு தடவை கட்டுவேலை செய்யப்பட்டதாகவும், 1-வது. அமரர்களும், 2-வது. ஆதம் நபியும், 3-வது. நூஹு நபியும், 4-வது. அமாலிக்காகினையோரும், 5-வது. இபுறுகீம் நபியும், 6-வது. நபிகள் நாயகம் முஹம்மது நபியும், 7-வது. ஹஜ்ஜாஜிப்னு யூசுபும் கட்டிப் பழுது பார்த்திருக்கிறதாகவுங் கூறப்படுகிறது.

இன்னுமொரு சொற்படி 12 கிறத்தவர்களால் கட்டப் பட்டதாகவுஞ் சொல்லப்படுகிறது.

கஉபா உடைய அடித்தளம் ஏழாம் பூமியில் தாவியிருக்கிறது. இது பதினாலு வீட்டி லொரு வீடு இதற்கு மேலும் இதற்குக் கீழும் இதற்கு நேரே

ஒவ்வொரு வானத்திலும் ஒவ்வொரு பூமியிலும் ஒவ்வொரு வீடுண்டாயிருக்கிறது.

கஉபாவைச் சுற்றிவர 300 நபிமார்கள் அடங்கப்பட்டிருக்கின்றார்கள். இன்னுமொரு சொற்படி ஆயிரம் நபிமார்கள் அடங்கப்பட்டிருக்கிறார்கள்.

சுவர்க்கத்துடைய எட்டு வாசற்களும் மக்கத்தளவில் திறக்கப்பட்டிருக்கின்றன. மக்காவில் ஒருவன் பிரார்த்தனை செய்தால் வானலோகத்தவர் அப்படியே ஆகட்டுமென்று பரிந்து கேட்பார்கள். அப்படிப்பட்ட பாவவிமோசனம் பெறும் சிறப்புடைய ஸ்தலம்.

## ஹஜறுல் அஸ்வது.

கஉபா வென்னுந் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிற "ஹஜறுல் அஸ்வது" என்னுங் கல்லு பூர்வத்தில் இங்குராத்தினத்தால் கட்டப்பட்டிருந்ததேவாலயத்திலுள்ளது. பிரளயகாலத்தில் அதை யுயர்த்தப்படும்போது அபீகுபைஸ் என்னும் மலை நாயனிடத்தில், நாயனே அளவிறந்த காலம் தரிசனை பண்ணி வந்த கஉபாவை உயர்த்திக் கொண்டால் நான் இனி எதைத் தெரிசித்து முத்திபெறுவேன்? என்று இரந்து கேட்டதற்காக, நாயன் உத்தரவுப்படி தேவ தூதர்கள் அந்த ஆலயத்தில் ஒரு கல்லைப் பெயர்த்துக்கொடுத்தார்கள். அதை அந்த மலை வைத்திருந்து நபி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கஉபாவை கட்டி முடித்தபோது அபீகுபைஸ் மலை தன்னுகவே பேசி அக்கல்லைக் கொடுத்தது. அதை யெடுத்துவந்து ஒரு மூணில்வைத்துச் சேர்த்துப் பதித்தார்கள். அக்காலத்தில் அது பிரபையுள்ளதாய்க் கண்ணைக் கவரஜொலித்தது. பிறகு மனிதர்கள் அதைத் தொட்டு முத்தம் இட ஆரம்பித்தார்கள். தீட்டுள்ள ஸ்திரீகள் முதல் எல்லாருந் தீண்டிவந்தபடியால், அது வரவரக் கருத்தது. அதனுல் ஹஜறுல் அஸ்வது (கருத்தக் கல்லு) என்று கூறப்படுகிறது.

இது சுவர்க்கத்து ரத்தினமென்றும் ஆதம் நபியோடு சுவர்க்கத்திலிருந்த ஓர் தேவ தூதர் தேவ கோக்கத்தால் இரத்த வடிவமா யுருவமைந்தார் அதுதான் இந்தக்கல்லு என்றுஞ் சொல்லப்படுகிறது.

## ஹஜ்ஜு வணக்கம்.

சிறப்புற்ற கஉபாவில் துல்ஹஜ்ஜு மாதம் 7 ந் தேதி மத்தியான் வணக்கத்தின் பிறகு ஹஜ்ஜுடைய முதல் குத்பா (பிரசங்கம்) ஓதப்படும். 8 ந் தேதி மீனுவுக்குப்போய் சேர்ந்து அங்கே ஐந்து நேரத்து வணக்கங்களைச் செய்து முடிக்கப்படும். 9 ந் தேதி அதிகாலை வணக்கத்திற்குப் பிறகு அறபாவைச் சேர்ந்திருக்கும் மஸ்ஜிதுல் நம்ரு வென்னுந் தேவாலயத்தில்

"ழுஹறு" "அஸறு" என்னும் (மத்தியான - பின்னேர) வணக்கங்களை ஒன்றாய்ச் சேர்த்து வணங்கிய பிறகு அங்கே குத்பா ஓதப்படும். பிரசங்கமுடிந்த பிறகு அறபாவில் சென்று பிரார்த்தனைகள் செய்யப்படும். அதன்பிறகு இரவில் "முஸ்டலிபா" வில் வந்து இராத்தங்கப்படும். 10 ந் தேதி காலமே மீனாவிற் சேர்ந்து வந்தனங்கள் புரிந்து பலி செலுத்திப் பெருநாள் கொண்டாடப்படும்.

---

## ஹஜ்ஜுப் பெருநாள்.

இஸ்லாம் மார்க்க அநுசாரிகளுக்கிடையில் ஹஜ்ஜுப்பெருநாளே அதிக விசேஷமுடையது. இதைப் பலியிடுந் திருநாளென்றும் அழைக்கப்படும். இப்பெருநாள் "பைறும்" என்று மிஸ்றிலும் ஸ்தம்பூலிலும் அழைக்கப்படும். துல்ஹஜ்ஜு மாதம் 9 ந் தேதி காலை முதல், 13 ந் தேதி அஸ்று (பின்னேர) வந்தன நேரம்வரைக்கும் தக்பீறு சொல்லுவது முஸ்லிம்களுக்கு நியமகமாம். பெருநாளை யடுத்த மூன்று நாட்களையும் "ஐயா முத்தஷ்ரீக்" என்று சொல்லப்படுகிறது.

---

## குர்பான்.

குர்பான் என்பது பலி செலுத்துவது. சுயாதீனர்களாகிய முஸ்லிம்களில் இயல்பையுடைய ஆண் பெண் இருபாலாரும் குர்பான் கொடுக்க வேண்டியது ஸுன்னத்து என்னும் முக்கிய நியமகமாம். அது பெருநாள் காலமே 7½ அல்லது 8 மணி முதல் 13 ந் தேதி கடைசி வரையிலுங் கொடுக்கலாம். ஆனால் பெருநாள் வணக்கமுடிந்தவுடன் கொடுப்பது உத்தமம். ஒரு வருஷத்திய செம்மறி ஆடு, அல்லது இரண்டு வருஷத்திய வெள்ளாடு, அல்லது மூன்று வருஷத்திய மாட்டுக்கன்று, அல்லது ஐந்து வருஷத்திய ஒட்டகம், பலி கொடுக்கலாம். ஒரு ஆடு ஒருவரைத் தொட்டும் ஒரு மாடு அல்லது ஒட்டகம் ஏழு பேரைத்தொட்டும் போதியது.

விரையடித்ததும், மோழையும், குருடானதும், நொண்டியும், மெலிந்ததும், காது வால் அறுக்கப்பட்டதும், இப்படிப்பட்ட அங்கக் குறைபாடுள்ளவைகள் குர்பானுக்காகாது. சொல்லப்பட்ட குறைக ளில்லாதவைகளே வேண்டியது.

குர்பானை மூன்றாய்ப் பிரித்து ஒரு பங்கைத் தானும், ஒரு பங்கை பந்து மித்திரர்களும் ஒரு பங்கை ஏழைகளும் பெறும்படி கொடுக்க வேண்டியது.

ஆகையால், இஸ்லாம் மித்திரர்களே! இயல்பையுடையவர்களே! மகிமையும் சிறப்பும் பொருந்திய மூன்றோக்கிவருகின்ற பெருநாளில் உங்கள் வணக்கங்களைச் செய்வதோடு உளுஹிய்யா வென்னும் குர்பானையும் கொடுத்து நன்மையைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பீர்களாக.

---